# தொல்காப்பிய மன்றம் - கனடா

தொல்காப்பியவழி தொன்மைத் தமிழர்
வரலாறும் பண்பாடும் அறிவோம்
2020

## தமிழ்த்திறன் போட்டி

## பிரிவு : 8

## 2008இல் பிறந்தோர்

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## முன்னுரை

தமிழின் முதன்மையைப் பறைசாற்றி நிற்கின்றது தொல்காப்பியம். தொன்மை சான்ற நூலை எமக்குத் தந்தருளியவர் தொல்காப்பியர். தொல்காப்பியமே தமிழரின் மொழியின் ஆளுமையையும், ஆளுகையையும் வெளிப்படுத்தும் தொன்மத்தின் கூறாக அமைந்துள்ளது. தொன்மை சான்ற இலக்கிய மரபினை உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழின் பெருமையையும் அதன் வழி தமிழரின் பாரம்பரியத்தையம், பண்பாட்டையும் எடுத்தியம்பும் பழம்பெரும் பொக்கிசமாக எமக்குக் கிடைத்துள்ளது. தொல்காப்பியம் காலப் பழமையும் கருத்தின் ஆழமும் கொண்ட மிகச்சிறந்த கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. “கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்” தமிழனது அறநெறியைப் புகட்டுவது போன்று தொல்காப்பியமும் அரும்பெரும் மொழிப் பெட்டகமாகத் திகழ்வது கண்கூடு. சொற்செறிவு, பொருட்செறிவு பொதிந்த தொல்காப்பிய பனுவலை பனம்பாரணர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் போன்றோர் நன்கு கற்றுணர்ந்து உரை தந்துள்ளனர். அத்தோடு தொல்காப்பியத்தின் தொன்மை பற்றி மறைமலையடிகள், வெள்ளைவாரணனார், சோமசுந்தர பாரதியார், வையாபுரிப்பிள்ளை, சீனிவாசக ஐயங்கார், நீலகண்ட சாஸ்திரிகள் போன்றோர் ஆய்ந்து எழுதியுள்ளமை அதன் சிறப்பை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

தோண்டத்தோண்ட ஊறிவரும் மனற்கேணி போன்று கற்கக் கற்க குறை வில்லாத் தெளிவைத் தந்து வியப்பில் ஆழ்த்துகின்றது தொல்காப்பியம். தமிழின் தொன்மைச்சான்று நூலான தொல்காப்பியத்தின் காலம் ஆய்வுகளின் காரணமாக அதன் ஆழ அகலத்தை மென்மேலும் ஆழங்காண வேண்டும் என்னும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. உலகிற் தோன்றிய பழம் பெரும் நாகரிகங்களில் திராவிட நாகரிகம் ஒன்று என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு மட்டுமன்றி தமிழைச் செம்மொழியாக்குவதற்கான அடிப்படை இலக்கண நூலாகவும் இது விளங்குகின்றது.

“ஓர் இனத்தை வீழ்த்த வேண்டுமானால் அவர்தம் மொழியை வீழ்த்த வேண்டும்” என்னும் எண்ணப்பாங்கிற்கேற்ப, உலக வரலாற்றில் பல்வேறு எழுச்சியுற்ற காலங்களில் சில இனங்களைச் சிதைத்தும் அழித்தும் வந்துள்ளன. உலகில் தோன்றிய மொழிகளில் பெருந் தொகையானவை அழிந்து போயுள்ளன. இதற்கு வேற்று இனங்களின் தாக்கம், ஆக்கிரமிப்பு, எழுச்சி என்பன காரணிகளாக அமைந்துள்ளன. ஒரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு ஒன்று மொழி, மற்றது மதம் என்பவை முக்கிய கருவிகளாக உலக வரலாற்றில் அமைந்துள்ளன.

# தொல்காப்பிய மன்றம் - கனடா

அதற்கு எமது தமிழினமும் விதிவிலக்கல்ல. அன்னிய ஆக்கிரமிப்பு, இயற்கையின் சீற்றம் போன்றன வரலாற்றுக் காலந்தொட்டே இடம் பெற்று வந்துள்ளன.

இன்று நாம் தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழ் தெரியாமல் வாழும் நிலை ஏற்பட்டுவருகின்றது. புலம்பெயர்ந்த மண்ணில் மட்டுமன்றி தாயகத்திலும் இன்று தமிழில் பேச வெட்கப்படும் நிலைமையினைக் காண்கின்றோம். வேற்று மொழி-களைப் பேசுவது பெருமை என நினைக்கின்றோம். தமிழ் உணர்வே இன்றி வாழ்ந்து வருகின்றோம். தமிழை வெறும் வயிற்றை நிரப்புவதற்காக மட்டும் பயன்படுத்தும் நிலைமாறி, இது எங்கள் தாய்மொழி, எமது உணர்வோடு ஒட்டிய மொழி என்னும் உண்மை உணர்வோடு செயற்பட எம்மை ஊக்குவிப்பதற்கான தொன்மை சார்ந்த நூல் ஒன்று உளது என்றால் அது தொல்காப்பியம் தான் என்று துணிந்து கூறமுடியும்.

கனடாவில் வாழும் தமிழ் மொழி கற்கும் மாணாக்கர் இலகுவாகத் தொல்காப்பியம் கூறம் செய்திகளையும் அதனோடு ஒத்த தமிழின செழுந்தன்மையையும், வரலாற்றையும் தெரிந்து கொள்ளும் நோக்கத்தோடு அறிமுகப் படுத்தப்படுவதே மாணவர்களுக்கான இந்தத் தேர்வு வினாக்கொத்து. பெற்றோர் இலகுவாகத் தம்பிள்ளைகளுக்கு எமது பண்பாடு, விழுமியம், மொழி பற்றிய அறிவினை வாழைப்பழத்தில் ஊசி செலுத்துவது போன்று அவர்கள் உள்ளத்தில் ஏற்றிவிட உதவுவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றை அக்கறையோடு பிள்ளைகள் கற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகின்றோம்.

**தொல்காப்பிய மன்றம் - கனடா**

---

## கனடா தொல்காப்பிய மன்றத்தின் செயலவை உறுப்பினர்

1. திரு. சபா. அருள்சுப்பிரமணியம் (தலைவர்)
2. திரு. வ.சுகந்தன் (செயலாளர்)
3. திரு. பா.யாழ்கோவன் (பொருளாளர்)
4. திருமதி. லீலா சிவானந்தன் (துணைத் தலைவர்)
5. திரு. சி.சண்முகராஜா (துணைச் செயலாளர்)
6. திரு. த.சிவபாலு
7. திரு. க.குமரகுரு
8. செல்வி. பொ.குமுதினி
9. திருமதி. வாசுகி நகுலராஜா
10. திரு. கனக மனோகரன்
11. திரு. ச.இராஜேஸ்வரன்

# தொல்காப்பிய மன்றப் பாடல்

## வாழியவே!

ஒல்காப் புகழ்கொண்ட புலவரவர் - தமிழ்
உலகம் போற்றிடும் அறிஞரவர்
தொல்காப் பியன்புகழ் பாடிவரும் - கனடா
தொல்காப் பியமன்றம் வாழியவே!

கனடா மண்ணில் கிளையமைத்தோம் - தமிழ்
கற்றவர் ஏற்றிடப் பணிபுரிவோம்!
மனதாய்த் தமிழர் வாழ்வியலை — தமிழ்
மாணவர் கற்றிட வழிசமைப்போம்!!

கற்றதை மற்றவர் அறிந்திடவே — எங்கள்
கனடாக் கிளைவழி செய்துதரும்
பற்றுடன் நாம்செய்யும் தொண்டுகளால் - இந்தப்
பாரினிற் தமிழ்மொழி வீறுபெறும்!

பண்டைத் தமிழரின் வாழ்வுதனை — நன்கு
படம்பிடித் தழகாய்த் தந்தவரே!
மண்டலம் உன்பணி போற்றுதையா! - இந்த
மாநிலத் தமிழினம் வாழ்த்துதையா!!

எழுத்து சொல்பொருள் எனவகுத்து — தமிழ்
இலக்கணம் செய்து தந்தவனாம்
பழுத்த முதுபெருஞ் சான்றோனாம் — தொல்
காப்பிய னார்புகழ் வாழியவே!

ஒன்பது இயல்களிற் தமிழரது — வாழ்வின்
உண்மைகள் யாவையும் பொதியவைத்து
மன்பதை போற்றிடும் நூலாக — ஆக்கி
வழங்கிய ஆசான் வாழியவே!

சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

## கையேடு - 8

### தமிழ்த்திறன் போட்டியின் நோக்கம்:

கனடா தொல்காப்பிய மன்றத்தினால் நடத்தப்படும் இந்த மொழித்திறன் போட்டி மாணவர்களின் மொழி ஆற்றலையும், சொற்களஞ்சியத்தையும் பெருக்கும் நோக்குடன் நடத்தப்படுகிறது. வேற்று இனமக்கள் மத்தியிலே வேற்று மொழியிற் கல்வி பயிலும் எமது தமிழ்ச் சிறார் தமிழ் மொழியை விரும்பிப் படிப்பதற்கு இப்போட்டியிற் பெறும் அறிவு உதவும் என்று நம்புகிறோம்.
சிறுவர் தமது சூழலில் உள்ள பொருட்களின் தமிழ்ப் பெயர்களை அறியவும், சொல்லவும் இப்போட்டி உதவுமெனவும் எண்ணுகிறோம்.
சரியான முறையில் பெற்றோரதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்புக் கிட்டும்போது எமது முயற்சி கடந்த ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் வெற்றிகரமாக நடை-பெறுமென்று எதிர்பார்க்கிறோம்.

## 2020 பிரிவு 8 தமிழ்த்திறன் போட்டிக்கான விதிமுறைகள்:

2008இல் பிறந்தவர்கள் இப்போட்டியிற் பங்கேற்கலாம். இவர்களுக்கான போட்டி 3 நிலைகளில் நடைபெறும்.

1.பேச்சுப்போட்டி 2. பொது அறிவுப்போட்டி 3. வினாக்களுக்கு விடைதெரிதல்

**1. பேச்சுப் போட்டி - "தொல்காப்பியம் தரும் பொருளதிகாரப் புதையல்"**

பேச்சுப் போட்டிக்குரிய பேச்சு கையேட்டில் உள்ளது.
சிறுவர் கொடுக்கப்பட்டுள்ள பகுதியை மனனம் செய்து நடுவர்கள் முன்னிலையில் பேசவேண்டும்.

**2. படங்களுக்கான சொற்களைக் கூறுதல்:**

- இப்பிரிவினருக்கு 192 படங்கள் பெயர்களுடன் கொடுக்கப்படும். அவற்றிற் குறிப்பிட்ட சொற்கள் மட்டும் கேட்கப்படும்.
- சொற்களைத் தெரிவுசெய்யும்போது குலுக்கல் முறையில் சொற்கள் தெரிவு செய்யப்படும்.
- போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்கள் கேட்கப்படும். முடிவு காண்பதில் சிக்கல் ஏற்படும் போது மேலதிக சொற்களின் புள்ளிகள் (bonus) கணக்கில் எடுக்கப்படும்
- படங்களுக்கான சொற்களைக் கூறுதல். மாணவர் பட்டறிவிற்கு உட்பட்டதாக மேலதிக வினாக்களும் கேட்கப்படும்.
- போட்டி நடைபெறும் நாள், இடம், நேரம் என்பன விண்ணப்பதாரிகளுக்குத் தனித்தனியே அறியத்தரப்படும். இணையத்தளம் ஊடாகவும் பார்க்கலாம்.

**3. கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து வட்டமிடுதல்.**

* பல்தேர்வு வினாவிடைகள் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே வழங்கப்படும். போட்டியாளர் கொடுக்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு-செய்யவேண்டும். மேலதிக வினாக்களும் கொடுக்கப்படும். போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்களின் புள்ளிகள் கணக்கில் எடுக்கப்படும்.

## 2020 கனடா தொல்காப்பிய மன்றம் நடத்தும் பேச்சுப் போட்டி

**பிரிவு: 8** **அகவைப் பிரிவு: 12**

## தொல்காப்பியம் தரும் பொருளதிகாரப் புதையல்.

**வணக்கம்.**

இன்றும் இளமை மணம் மாறாத கன்னிப்பெண்ணாக தமிழ் நங்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றாள். அதற்குக் அம்மொழியின் இலக்கண, இலக்கிய வளங்களே காரணமாகும். அதற்கு ஆதாரமாக உள்ள நூல் தொல்காப்பியம் என்பேன். தொல்காப்பியம் இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முந்தியது என்பது ஆய்வுகளின் முடிபு. தொல்காப்பியப் பொருளதிகாரம் தமிழர் வாழ்வியலின் அகக்கூறுகளையும் புறக்கூறு களையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் தமிழரின் வாழ்வியற் கோலங்களை அது அழகு தமிழிற் பதிந்தும் வைத்துள்ளது. எத்துணை ஆண்டுகள் கடந்தாலும் மாறா இளமையுடன் நிற்கிறது.

பழந்தமிழ் இலக்கியங்களையும், பண்டைச் சான்றோர் கருத்துகளையும் தொகுத்து ஆக்கப்பட்ட நூலே தொல்காப்பியம். அது எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒன்பது இயல்களைக் கொண்டு விளங்குகிறன. தமிழிலக்கிய இலக்கண மரபுகளும், அதிகார வைப்புமுறையும் அதன் முதன்மைக்குச் சான்று பகர்கின்றன.

மனிதச் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது நிலமும் பொழுதும் அன்றோ. அதனை முதற்பொருள் என்பார் தொல்காப்பியர். கருப்பொருள், உரிப்பொருள் போன்றவற்றையும் அகவாழ்க்கைச் செய்தி-களையும் அகத்திணையில் கூறுகின்றார். நாட்டு வாழ்க்கை பற்றிய செய்திகளைப் புறத்திணையில் வைத்துள்ளார். அன்பு வாழ்வியலின் அடிப்படை என்பதனைக் கொண்டு களவியல், கற்பியல் என எடுத்துக் காட்டுகின்றார்.

உலகில் உள்ள அனைவரதும் மெய்ப்பாடு ஒன்றுதான். மனிதர் அழுவது, சிரிப்பது, சினப்பது, மகிழ்வது, பெருமிதம் கொள்ளுவது போன்றவற்றை மெய்ப்பாட்டியல் பேசுகின்றது. செய்யுளை அனுபவிப்பதற்கு அவற்றில் அழகுகள் தேவை. அதை அணி இலக்கணம் கூறுவதுபோன்றே, உவமை மற்றும் இலக்கிய வகைகளை செய்யுளியலில் தந்து வியக்க வைத்துள்ளார். இவற்றை எல்லாம் நான் கூறவில்லையப்பா எனக்கு முந்திய அறிஞர்களே கூறியுள்ளனர் என்றும் அடிக்கடி கூறியுள்ளார். இதற்கு அவரது 'என்மனார் புலவர்', 'என்ப' என்ற கூற்றுகள் சான்றாக உள்ளன.

புதுமை, எளிமை, அருமை கொண்ட நூலாகத் தொல்காப்பியத்தை ஆக்கித் தமிழுலகிற்குத் தந்த தொல்காப்பியரின் பெருமையை உலகறியச் செய்வோம். வாழ்க தொல்காப்பியம், வளர்க அதன் பெருமை. தமிழ் அறிந்த தமிழராக நாங்கள் வாழ்வோம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

# பலகார வகை


வடை


முறுக்கு


அரியதரம்


பகோடா


மோதகம்


கொழுக்கட்டை



வாய்ப்பன்


பணியாரம்

# உடல் உறுப்புகள்



கண்ணிமை



அண்ணம்



நாக்கு



தோள்மூட்டு



கழுத்து



மணிக்கட்டு



முழங்கால்



பாதம்

# பூக்கள்



மல்லிகைப்பூ



சாமந்திப்பூ



கனகாம்பரப்பூ



செவ்வரத்தம்பூ



தாமரைப்பூ



சூரியகாந்திப்பூ



றோசாப்பூ



வாழைப்பூ

# எண்கள்

| | |
|---|---|
| **91**<br>தொண்ணூற்றொன்று | **92**<br>தொண்ணூற்றிரண்டு |
| **93**<br>தொண்ணூற்றிமூன்று | **94**<br>தொண்ணூற்றினான்கு |
| **95**<br>தொண்ணூற்றைந்து | **96**<br>தொண்ணூற்றாறு |
| **98**<br>தொண்ணூற்றெட்டு | **99**<br>தொண்ணூற்றொன்பது |

# காய்கள்


நாரத்தங்காய்


வாழைக்காய்


பலாக்காய்


பூசணிக்காய்




அன்னமுன்னாக்காய்


நெல்லிக்காய்


விளாங்காய்


சுரைக்காய்

# பெரியார்கள்

| | |
|---|---|
|  |  |
| தொல்காப்பியர் | வள்ளுவர் |
|  |  |
| வீரமாமுனிவர் | அறிஞர் அண்ணா |
|  |  |
| மு.வரதராசன் | தனிநாயகம் அடிகளார் |
|  |  |
| நாவலர் | பாரதியார் |

# பறவைகள்



வாத்து



கிளி



வான்கோழி



பருந்து



மரங்கொத்தி



செண்பகம்



கழுகு



ஆந்தை

# கிழங்கு வகை



உருளைக்கிழங்கு




மரவள்ளிக்கிழங்கு



இராசவள்ளிக்கிழங்கு



இஞ்சி



வற்றாளங்கிழங்கு



கருணைக்கிழங்கு



பனங்கிழங்கு




முள்ளங்கி

# மிருகம்




கரும்புலி



வரிக்குதிரை



குதிரை



கழுதை



புலி



சிங்கம்



எருமை



சிறுத்தை

# உந்துவகை

| | |
|---|---|
| <br>**சிற்றுந்து** | <br>**பேருந்து** |
| <br>**மிதியுந்து** | <br>**தொடருந்து** |
| <br>**விண்ணுந்து** | <br>**நீர்மூழ்கி** |
| <br>**பாரவூர்தி** | <br>**முச்சக்கரவண்டி** |

# வீட்டுப் பொருட்கள்



வானொலிப்பெட்டி




தொலைக்காட்சிப்பெட்டி



கணினி



தாச்சி



மின்னடுப்பு



குளிர்சாதனப்பெட்டி




தொலைபேசி




மணிக்கூடு

# பழங்கள்

| | |
|---|---|
| <br>கொய்யாப்பழம் | <br>புளியம்பழம் |
| <br>எலுமிச்சம்பழம் | <br>பப்பாசிப்பழம் |
| <br>வாழைப்பழம் | <br>பேரீச்சம்பழம் |
| <br>முலாம்பழம் | <br>பனம்பழம் |

# பாவனைப் பொருட்கள்



அம்மி



ஆட்டுக்கல்



பிட்டு உலை



சுளகு



இடியப்ப உரல்



திரிகை



சூட்டுஅடுப்பு



திருகணை

# பூச்சி வகை



இலையான்



ஈசல்



கரப்பான் பூச்சி



கறையான்



சிலந்தி



குளவி



மூட்டைப்பூச்சி



புலிமயிர்ச்சிலந்தி

# மரங்கள்



பனை



தென்னை



முருங்கை



கமுகு



அரசமரம்



வேம்பு



ஆலமரம்



மேப்பிள்


# கடல் வாழ்வன



மீன்



நண்டு



சுறா



இறால்




கடலட்டை



சங்கு



கணவாய்



திமிங்கிலம்

# தாயகப் பறவைகள்



குயில்



வல்லூறு



காகம்



கௌதாரி



புறா



செண்பகம்



கழுகு



மைனா

# மங்கலப் பொருட்கள்


கும்பம்


தேங்காய்


மாவிலை


குத்துவிளக்கு


பன்னீர்ச்செம்பு


சந்தனம்


வாழையிலை


குங்குமம்

# உணவு வகை


இட்டலி


இடியப்பம்


பாயாசம்


கழி


உப்புமா


குழல்பிட்டு


சோறு


அப்பம்

# காய்கறிகள்



பாகற்காய்



புடலங்காய்(புடோல்)



நீத்துப்பூசணிக்காய்



கெக்கரிக்காய்



வெண்டிக்காய்



அவரைக்காய்



போஞ்சிக்காய்



சுரைக்காய்

# ஊர்வன



பாம்பு



உடும்பு



அழுங்கு



கீரி (நகுலம்)



பச்சோந்தி



முதலை



அட்டை



மட்டத்தேள்

# நினைவுச் சின்னங்கள்




தாஜ்மஹால்




நயகரா நீர்வீழ்ச்சி



சி.என்.கோபுரம்




இந்தியா வாசல்




சிகிரியா



சுதந்திரதேவி சிலை



ஈபில் கோபரம்



சீனப் பெருஞ்சுவர்

# கொடிகள்



கனடா




இலங்கை




அமெரிக்கா




இந்தியா



பிரித்தானியா



பிரான்ஸ்



சுவிஸ்



ஜேர்மனி

# ஆடை வகைகள்



காற்சட்டை



மேற்சட்டை



உள்ளாடை



துண்டுத்தாவணி



சேலை



சால்வை



வேட்டி



தலைப்பாகை

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## பிரிவு 8 வினா - விடைகள்

1. தமிழில் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
**நான்கு (உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்து)**

2. தமிழில் உள்ள முதலெழுத்துகள் எத்தனை?
**முப்பது 30 ( உயிர்எழுத்து, மெய்யெழுத்து)**
**உயிரெழுத்துக்கள் - 12 மெய்யெழுத்துக்கள் - 18**

3. எழுத்துக்களின் வடிவம் எத்தனை வகைப்படும்?
**இரண்டு (வரிவடிவம், ஒலிவடிவம் )**

4. எழுத்துக்கள் ஒலிக்கும் காலத்தை அளவிடும் அலகு என்ன? **மாத்திரை**

5. ஒரு மாத்திரை என்பது எவ்வளவு கால அளவைக் குறிக்கும்?
**1. மனிதர்கள் இயல்பாக கண் இமைக்கும் நேரம்**
**2. மனிதர்கள் இயல்பாக கை நொடிக்கும் (சொடுக்குப் போடும்) நேரம்**

6. உயிர்க் குறில்கள் எத்தனை? **ஐந்து 5 (அ, இ, உ, எ, ஒ)**

7. உயிர் நெடில்கள் எத்தனை?
**ஏழு 7 (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ)**

8. மெய் எழுத்துக்களை அவை ஒலிக்கும் தன்மையைக் கொண்டு எவ்வாறு பிரிக்கிறோம்?
**வல்லினம், மெல்லினம், இடையினம்**

9. வல்லின மெய் எழுத்துகளைத் தருக? **க், ச், ட், த், ப், ற்**

10. மெல்லின மெய் எழுத்துகள் எவை? **ங், ஞ், ண், ந், ம், ன்**

11. இடையின மெய் எழுத்துகள் எவை? **ய், ர், ல், வ், ழ், ள்**

12. உயிரும் மெய்யும் சேர்வதால் ஆக்கப்படும் எழுத்துகள் எத்தனை? **216**

13. வல்லின உயிர்மெய் எழுத்துகள் எத்தனை? **72**

14. மெல்லின உயிர்மெய் எழுத்துகள் எத்தனை? **72**

15. இடையின உயிர்மெய் எழுத்துகள் எத்தனை? **72**

16. எழுத்துக்களின் மாத்திரைகளை அடையாளம் காண்க?

| | | |
|---|---|---|
| **உயிர்க்குறில்** | **ஒரு மாத்திரை** | **அ, இ** |
| **உயிர்மெய்க்குறில்** | **ஒரு மாத்திரை** | **ப, த** |
| **உயிர்நெடில்** | **இரண்டு மாத்திரை** | **ஊ, ஏ** |
| **உயிர்மெய்நெடில்** | **இரண்டு மாத்திரை** | **போ, பூ** |
| **மெய்எழுத்து** | **அரை மாத்திரை** | **ய், ள்** |

17. சுட்டெழுத்துக்கள் எவை? **அ, இ, உ**

18. வினாவெழுத்துக்கள் எவை? **ஆ, எ, ஏ, ஓ, யா**

19. சொல் என்றால் என்ன? **ஓர் எழுத்துத் தனித்து நின்று அல்லது பல எழுத்துக்களோடு சேர்ந்து நின்று பொருள் தரும் போது அது சொல் எனப்படும்.**

20. தமிழில் உள்ள சொற்களின் வகைகளைத் தருக? **நான்கு (பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்)**

21. பெயர்ச்சொல் என்றால் என்ன?
**ஒரு பொருளைக் குறிக்கும் சொல்**

22. பெயர்ச்சொல் உருவாகும் வகைகள் எவை?
**காரணப்பெயர், இடுகுறிப்பெயர்**

23. காரணப்பபெயர் என்றால் என்ன?
**காரணம் கருதி வழங்கப்பட்ட பெயர்**
**(முக்காலி, நாற்காலி, பறவை, கால்நடை)**

24. இடுகுறிப்பெயர் என்றால் என்ன? **காரணம் இன்றி, இட்டு வழங்கிய பெயர் (காற்று, மண், மரம், வானம்)**

**25.** பெயர்ச்சொல் அது சுட்டும் பொருள் கருதி எத்தனை வகைப்படும்? **ஆறு (பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர்)**

68. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனப் பாடியவர் யார்? **கணியன் பூங்குன்றனார்**

69. சங்கப் புலவர் பட்டியலில் இடம்பெறும் ஈழத்தவர் யார்? **பூதந்தேவனார்**

70. ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த மன்னன் யார்? **அதியமான்**

71. முல்லைக்குத் தேர் ஈந்த மன்னன் யார்? **பாரி**

72. தமிழரின் தற்காப்பு விளையாட்டுகள் எவை? **சிலம்பாட்டம், களரி, மல்லாடல்**

73. தமிழரின் வீரவிளையாட்டுகளில் ஒன்றைக் கூறுக? **ஏறுதழுவுதல்**

74. யானையின் கொம்பை எவ்விதம் அழைப்பர்? **தந்தம்**

75. நாய், பன்றி, புலி, முயல், சிங்கம் ஆகியவற்றின் இளமைப் பெயர் எது? **குருளை**

76. அரி என்னும் சொல் எந்த விலங்கினைக் குறிக்கும்? **சிங்கம்**

77. காகங்கள் எழுப்பும் ஒலியை எப்படி அழைப்பர்? **கரைதல்**

78. ஆந்தை, கழுகு என்பன எழுப்பும் ஒலியை எப்படி அழைப்பர்? **அலறுதல்**

79. பறவைகளின் இளமைப் பெயர் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுபவை எவை? **பார்ப்பு, பிள்ளை**

80. யானைகள் எழுப்பும் ஒலி என்ன? **பிளிறுதல்**

81. சிங்கம் ஒழுப்பும் ஒலி எது? **கர்ச்சித்தல்**

82. சேவல் எழுப்பும் ஒலி எது? **கூவுதல்**

83. கழுதை எழுப்பும் ஒலி எது? **கத்துதல்**

84. கரடி எவ்விதமான சத்தத்தை எழுப்பும்? **உறுமுதல்**

26. பின்வரும் பெயர்ச்சொற்களை அடையாளம் காண்க?
**1. பிள்ளை, மரம், ஆடு - பொருட்பெயர்**
**2. கனடா, கதிர்காமம், வீடு, மேடு, பள்ளம் - இடப்பெயர்**
**3. நாள், கிழமை, வருடம், மாலை, மாசி, மணித்தியாலம், நிமிடம் - காலப்பெயர்**
**4. தலை, கிளை, கை, இலை, பழம் - சினைப்பெயர்**
**5. கருமை, இனிமை, வட்டம், நிறை, நன்று, ஒருமை, பன்மை - குணப்பெயர்**
**6. படித்தல், பிடித்தல், கொதி, இடி, கேடு, சூடு - தொழிற்பெயர்**

27. பெயர்ச்சொல் எவற்றை (எவ்வகைப் பொருள்) உணர்த்தும்?
**திணை, பால், எண், இடம், வேற்றுமை**

28. திணை எத்தனை வகைப்படும்? **உயர்திணை, அ்.றிணை**

29. உயர் திணையின் பால் வகைகள் எவை?
**ஆண்பால், பெண்பால், பலர்பால்**

30. அ்.றிணையில் உள்ள பால்கள் எவை?
**ஒன்றன்பால், பலவின்பால்**

31. எண் (எண்ணிக்கை) எத்தனை வகைப்படும்?
**இரண்டு (ஒருமை, பன்மை)**

32. இடம் எத்தனை வகைப்படும்?
**தன்மை, முன்னிலை, படர்க்கை**

33. வேற்றுமை என்றால் என்ன? **பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை**

34. வேற்றுமை உருபு என்றால் என்ன?
**பெயர்ச்சொற்களின் இறுதியில் வந்து அப்பெயர்ச் சொற்களின் பொருளை மாற்றுவது**

35. தமிழ் இலக்கணத்தில் உள்ள வேற்றுமைகள் எத்தனை?
**எட்டு 1. மழை (எழுவாய்) - உருபு இல்லை**
**2. மழையை - ஐ**
**3. மழையால் - ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன்**
**4. மழைக்கு - கு**
**5. மழையின் - இன், இல்**
**6. மழையினது - அது**
**7. மழைக்கண் - கண், உள், மேல், கீழ்**
**8. மழையே! (விளி) - உருபு இல்லை**

36. வேற்றுமை உருபு ஏற்காத வேற்றுமைகள் எவை?
**முதலாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை**

37. பின்வரும் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்றபின் வரும் சொல்லை எழுதுக?
**1. நீ + ஐ = உன்னை, நின்னை**
**2. நான் + ஐ = என்னை**
**3. நான் + ஆல் = என்னால்**
**4. நாங்கள் + கு = எங்களுக்கு**
**5. நாம் + இல் = எம்மில், நம்மில்**
**6. நாங்கள் + இன் = எங்களின்**

38. வினைச்சொல் என்றால் என்ன?
**ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் சொல்**

39. வினைச்சொல் எத்தனை வகைப்படும்? **இரண்டு**
**முற்றுவினை (வினைமுற்று), எச்சவினை (வினையெச்சம்)**

40. பெயர்ச்சொல்லிற்கும் வினைச்சொல்லிற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?
**1. பெயர்ச்சொல் வேற்றுமை உருபை ஏற்கும், வினைச்சொல் ஏற்காது.**
**2. பெயர்ச்சொல் காலம் காட்டாது. வினைச்சொல் காலம் காட்டும்.**

41. முற்றுவினை அல்லது வினைமுற்று வகைகள் எவை?
**தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று**

42. எச்சவினைகள் எத்தனை வகைப்படும்?
**பெயரெச்சம், வினையெச்சம்**

43. காலம் எத்தனை வகைப்படும்?
**மூன்று (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்)**

44. வினைச்சொற்களில் காலத்தைக் காட்டும் இடைநிலைகளை அடையாளம் காண்க?
**1. இறந்தகால இடைநிலைகள் - த், ட், ற், இன், ன்**
**2. நிகழ்கால இடைநிலைகள் - ஆநின்று, கின்று, கிறு**
**3. எதிர்கால இடைநிலைகள் - ப், வ்**

147. இலகுவாகப் பேசப் பழக்கக்கூடிய பறவைகள் இரண்டின் பெயரைத் தருக? **கிளி, மைனா**

148. இலங்கையை ஆங்கிலேயர் அழைத்த பெயர் என்ன? **சிலோன்**

149. போர்த்துக்கேயர் இலங்கையை எவ்விதம் அழைத்தனர்? **தப்பிரபேன்**

150. இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கபபட்ட நாடு எது? **இலங்கை**

151. "பாலைவனக் கப்பல்" என்று அழைக்கப்படும் விலங்கு எது? **ஒட்டகம்**

152. கனடா தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது? **ஆடி மாதம் 1ம் திகதி**

153. குடும்பநாள் விடுமுறை எந்த மாதத்தில் கொண்டாடப்படுகிறது? **மாசி மாதம்**

154. கனடாவின் பிரதம அமைச்சர் யார்? **ஜஸ்ரின் ரூடோ**

155. கனடாவின் அரச தலைவர் யார்? **எலிசபெத் மகாராணி**

156. யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதித் தமிழ் மன்னன் யார்? **சங்கிலியன்**

157. வன்னியை ஆண்ட இறுதித் தமிழ் மன்னன் யார்? **பண்டார வன்னியன்**

158. கண்டியை ஆண்ட இறுதி மன்னன் யார்? **ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன்**

159. ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனின் தமிழ்ப் பெயர் என்ன? **கண்ணுச்சாமி**

160. ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் தோற்கடிக்கப்பட்டது எத்தனையாம் ஆண்டு? **1815**

161. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தது எத்தனையாம் ஆண்டு? **1505**

45. இடைச்சொல் என்றால் என்ன? **தனித்துப் பொருள் தராது, பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சேர்ந்து அவற்றின் தன்மையை(பொருளை) மாற்றும்.**

46. இடைச்சொல்லிற்கு உதாரணம் தருக?
**1. வேற்றுமை உருபுகள்**
**2. காலம் காட்டும் இடைநிலைகள்**

47. உரிச்சொல் என்றால் என்ன? **தனித்துப் பொருள் தராது, பெயர்ச்சொல் வினைச்சொல் ஆகியவற்றின் முன்னே இணைந்து பெயர்ச்சொல் வினைச்சொல் என்பவற்றின் பண்பை உணர்த்தும்.**

48. உறுபசி என்பதில் உள்ள உறு என்னும் உரிச்சொல் இங்கு எதனைக் குறிக்கிறது? **மிகவும்**

49. மாவீரன் என்பதில் உள்ள 'மா' எவ்வகைச் சொல்? **உரிச்சொல்**

50. சொல்லின் இறுதியில் நிற்கும் பகுதியை எவ்விதம் அழைப்பர்? **விகுதி**

51. சொற்களில் அடிச்சொல் அல்லது பகுதி எங்கே நிற்கும்? **முதலில்**

52. விகுதியைக் கொண்டு எவற்றை அறியமுடியும்? **திணை, பால், எண், இடம்**

53. ஒத்த கருத்துச் சொல் தருக?

| | |
|---|---|
| **கை - கரம்** | **இடுக்கண் - துன்பம்** |
| **அரவம் - பாம்பு, ஒலி** | **ஞாயிறு - சூரியன்** |
| **அல்லல் - துன்பம்** | **தொடக்கம் - ஆரம்பம்** |
| **அடையாளம் - சின்னம்** | **ஆரவாரம் - போரொலி** |
| **அடர்த்தி - செறிவு** | **உத்தரவு - கட்டளை** |

54. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களைத் தருக?

| | |
|---|---|
| **1. மலை - மடு** | **6. துன்பம் - இன்பம்** |
| **2. அடி - முடி** | **7. இவை - அவை** |
| **3. அகம் - புறம்** | **8. மேல் - கீழ்** |
| **4. நட்பு - பகை** | **9. பந்தயம் - போட்டி** |
| **5. விருப்பு- வெறுப்பு** | **10. ஆழி - கடல், சமுத்திரம்** |

55. பழந்தமிழ் இலக்கண நூல் எது? **தொல்காப்பியம்**

56. தொல்காப்பியத்தை எழுதியவர் யார்? **தொல்காப்பியர்**

57. தொல்காப்பியத்தில் எத்தனை நூற்பாக்கள் உள்ளன? **1602**

58. தொல்காப்பியத்தின் அதிகாரப் பிரிவுகள் எவை?
**எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்**

59. முத்தமிழ் என அழைக்கப்படுபவை எவை?
**இயல், இசை, நாடகம்**

60. தமிழில் தோன்றிய முதற்காப்பியம், சிறப்புப் பெயராக "முத்தமிழ்க் காப்பியம்" என்று அழைக்கப்படும் இக்காப்பியத்தின் பெயர் என்ன? **சிலப்பதிகாரம்**

61. சிலப்பதிகாரம் தமிழர்களின் பண்பாட்டு ஆவணமாகப் போற்றப்படுவதன் காரணம் என்ன?
**சிலப்பதிகாரம் சங்ககால மக்களின் வாழ்க்கை முறை, நகர அமைப்பு, மக்களின் கலைகள், மக்களின் சமய நம்பிக்கைகள் மற்றும் அவர்களின் பழக்கவழக்கங்களை விரிவாக எடுத்துச் சொல்வதால் இது ஒரு பண்பாட்டு ஆவணமாகப் போற்றப்படுகிறது.**

62. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்? **இளங்கோ அடிகள்**

63. தமிழுக்குக் கதி எனக் கூறப்படும் நூல்கள் எவை?
**கம்பராமாயணம், திருக்குறள்**

64. திருக்குறளின் முப்பால்கள் எவை?
**1. அறத்துப்பால் 2. பொருட்பால் 3. இன்பத்துப்பால்**

65. ஔவையார் எழுதிய நூல்கள் எவை?
**ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நன்னூல்**

66. தமிழ் மொழிக்கு செம்மொழி என்ற தகுதி எந்த ஆண்டில் வழங்கப்பட்டது? **2004**

67. முதலாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை ஒழுங்கமைத்த ஈழத்தவர் யார்? **தனிநாயம் அடிகள்**

85. எருது எழுப்பும் ஒலி என்ன? **எக்காளமிடுதல்**

86. நரி, ஓநாய் எழுப்பும் சத்தத்தை எப்படி அழைப்பர்? **ஊளையிடுதல்**

87. குதிரைகள் எழுப்பும் ஒலியை எப்படி அழைப்பர்? **கனைத்தல்**

88. புலி எழுப்பும் ஒலியை எப்படி அழைப்பர்? **உறுமுதல்**

89. மயில் எழுப்பும் ஓசையை எப்படி அழைப்பர்? **அகவுதல்**

90. ஆடு என்னும் விலங்கின் பெண்பாற் பெயர்? **மறி, பிணவு**

91. ஆண் மான், ஆண் மரை ஆகிய விலங்கினைக் குறிக்கும் மரபுச் சொல் எது? **கலை**

92. வானரம் என்னும் விலங்கு எது? **குரங்கு**

93. புல்வாய் என்னும் விலங்கின் மறுபெயர் என்ன? **மான்**

94. கப்பலோட்டியை எவ்வாறு அழைப்பர்? **மீகாமன்**

95. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல். . . " எனும் பாடலைப் பாடியவர் யார்? **சுப்பிரமணிய பாரதியார்**

96. இத்தாலியரான 'ஜோசேப் பெஸ்கி' தனக்கு வைத்துக் கொண்ட தமிழ்ப்பெயர் என்ன? **வீரமாமுனிவர்**

97. மூவேந்தர் என அழைக்கப்படுவோர் யாவர்? **சேரர், சோழர், பாண்டியர்**

98. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் கொடிகளின் சின்னங்கள் எவை? **வில், புலி, மீன்**

99. சங்கிலியன் தோப்பு எங்கே அமைந்துள்ளது? **நல்லூர்**

100. தமிழகத்திலும் ஈழத்திலும் பாடசாலைகளை நிறுவித் தமிழ் வளர்த்த ஈழத்தவர் யார்? **ஆறுமுக நாவலர்**

101. கப்பலோட்டிய தமிழன் என அழைக்கப்படுபவர் யார்? **வ. உ. சிதம்பரனார்**

102. யாழ் நூலை எழுதியவர் யார்? **விபுலாநந்தர்**

103. திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்? **ஜி. யு.போப்**

104. "A student of Tamil Literature" எனத் தனது சமாதியில் எழுதி வைக்கச் சொன்னவர் யார்? **ஜி. யு.போப்**

105. தாய்லாந்தில் திருமணத்தின் போது பாடப்படும் தமிழ்ப்பாடல் எது? **திருவாசகம்**

106. ஐம்புலன்கள் என அழைக்கப்படுபவை யாவை? **1. மெய் 2. வாய் 3. கண் 4. மூக்கு 5. செவி**

107. ஐவகை நிலங்கள் எனப்படுபவை எவை? **முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை**

108. அறுசுவைகள் எவை? **1. கைப்பு 2. தித்திப்பு 3. புளிப்பு 4. உவர்ப்பு 5. துவர்ப்பு 6. கார்ப்பு**

109. பெண்களின் ஏழு பருவங்கள் எவை? **பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்**

110. எழினி என்பதற்பான ஒத்த பொருள் தரும் சொல் எது? **மேகம்**

111. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்? **மறைமலையடியகள்**

112. ஏர் கொண்டு நிலத்தை உழுது பயிர் விளைவிப்பவனை எவ்விதம் அழைப்பர்? **உழவன்**

113. விமானமோட்டிக்கு ஒத்த பொருள் தரும் சொல் எது? **வலவன்**

114. உழவன் என்பதற்கான பெண்பாற் பெயர் என்ன? **உழத்தி**

162. ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தது எத்தனையாம் ஆண்டு? **1659**

163. ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்தது எத்தனையாம் ஆண்டு? **1796**

164. கனடாவில் உள்ள மாகாணங்கள் எத்தனை? **பத்து (10)**

165. கனடாவில் உள்ள ஆள்புலங்கள் (territory) எத்தனை? **மூன்று (3)**

166. கனடாவின் முதலாவது பிரதம அமைச்சர் யார்? **சேர் ஜோன் மக்டொனால்ட்**

167. கனடா தேசிய கொடியின் சின்னம் எது? **மேப்பிள் இலை**

168. இலங்கையின் தற்போதைய தலைநகரம் எது? **சிறிஜெயவர்த்தனபுரம்**

169. இலங்கையில் எத்தனை மாகாணங்கள் உண்டு? **ஒன்பது**

170. யாழ்ப்பாணம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது? **வடமாகாணம்**

171. கனடாவின் குடித்தொகை அண்ணளவாக எவ்வளவு? **37.5 மில்லியன்**

172. இலங்கையின் சனத்தெகை அண்ணளவாக எவ்வளவு? **21.5 மில்லியன்**

173. உலகில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவு? **ஒன்பது கோடி (9)**

174. உலகில் சனத்தொகை கூடிய நாடு எது? **சீனா**

175. "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி" என்னும் பாடலைப் பாடியவர் யார்? **சுப்பிரமணிய பாரதியார்**

176. ஏட்டுச் சுவடிகளைத் தேடிப்பெற்று நூலுருவாக்கிய ஈழத்தவர் யார்? **சி.வை.தாமோதரம்பிள்ளை**

177. ஈழத்தமிழர் வரலாற்றில் "கறுப்பு ஜூலை" எனப்படும் வன்முறைகள் இடம்பெற்ற ஆண்டு எது? **1983**

115. விதவை என்பதற்கான ஆண்பாற் பெயர் என்ன? **தபுதாரன்**

116. மூத்தோன் என்பற்கான பெண்பாற் பெயர் என்ன? **மூத்தோள்**

117. முகர்ந்ததும் வாடி விடும் பூ எது? **அனிச்சம் பூ**

118. தொட்டால் வாடிவிடும் செடி எது?
**தொட்டால் சிணுங்கி (தொட்டால் வாடி)**

119. இலங்கையின் பூர்வீகக் குடிகள் யாவர்? **இயக்கர், நாகர்**

120. கனடாவின் தேசிய விலங்கு எது? பீவர் (Beaver)

121. Cancer என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது? **புற்றுநோய்**

122. Allergy என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது? **ஒவ்வாமை**

123. Diabetes என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது? **நீரிழிவு**

124. Heart attack என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது? **மார்படைப்பு**

125. Website என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
**இணையத்தளம்**

126. Unicode Font என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
**ஒருங்குறி எழுத்துரு**

127. Browser என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது? **உலாவி**

128. Database என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
**தரவுத்தளம்**

129. Hardware என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
**வன்பொருள்**

130. Email என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது? **மின்னஞ்சல்**

131. Software என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
**மென்பொருள்**

132. Keyboard என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
**விசைப்பலகை**

133. Computer virus என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது? **கணினி நச்சுநிரல்**

134. Whale என்னும் ஆங்கிலப் பதத்தின் தமிழ்ப் பதம் எது? **திமிங்கிலம்**

135. Tsunami என்பதற்கான தமிழ்ச் சொல் எது? **ஆழிப்பேரலை**

136. Assessment என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **மதிப்பீடு**

137. Value என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **மதிப்பு, பெறுமதி**

138. Examination என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **பரீட்சித்தல் - தேர்வு**

139. Air-condition என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **குளிரூட்டி**

140. Adjective என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **பெயரடைச் சொல்**

141. Adverb என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **வினையடைச் சொல்**

142. Grammar என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **இலக்கணம்**

143. File என்னும் ஆங்கிலச் சொல்லிற்கான தமிழ்ப் பதம் எது? **கோப்பு**

144. Marian என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **கடல்**

145. Refrigerator என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **குளிரூட்டிப் பெட்டி**

146. Wooden Spoon என்னும் ஆங்கிலப் பதத்திற்கான தமிழ்ப் பதம் எது? **அகப்பை**

178. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்ட ஆண்டு எது? **1981**

179. கனடாவில் வாழும் தமிழர் தொகை அண்ணளவாக எத்தனை? **300,000**

180. கனடாவின் எல்லைகள் எவை? **அற்லான்ரிக், வடதுருவம், பசிபிக், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நான்கு எல்லைகளைக் கொண்டுள்ளது.**

181. கனடாவில் தமிழ் மரபுத்திங்கள் எந்த மாதத்திற் கொண்டாடப்படுகிறது? **தை மாதத்தில்**

182. தமிழ் மரபுத் திங்களைக் கனடா அரசு உத்தியோக பூர்வமாக அங்கீகரித்த ஆண்டு எது? **2016**

183. இருபத்தைந்தாவது ஆண்டு விழாவை எவ்வாறு அழைப்பர்? **வெள்ளிவிழா**

184. ஐம்பதாவது ஆண்டு விழாவை எவ்விதம் அழைப்பார்கள்? **பொன்விழா**

185. அறுபதாவது ஆண்டு விழாவை எவ்விதம் அழைப்பார்கள்? **வைரவிழா**

186. நூறாவது ஆண்டு விழாவை எவ்விதம் அழைப்பார்கள்? **சதமவிழா, நூற்றாண்டு விழா**

187. இலங்கைக்கான மறுபெயர்கள் எவை? **ஈழம், சீகளம், செரண்டிப், தப்பிரபேன், சிலோன்**

188. இலங்கையில் இருந்து பாக்குநீரிணையை நீந்திக் கடந்த ஈழத்தவர் யார்? **ஆழிக்குமரன் ஆனந்தன்**

189. உயரம் பாய்வதில் உலகசாதனை படைத்த இலங்கையர் யார்? **எதிர்வீரசிங்கம்**

190. கற்பகதரு என்று யாழ்ப்பாண மக்களால் போற்றப்படும் மரம் எது? **பனைமரம்**

JRS College
of Business and Health Care Inc.
"Committed to providing quality training"

We offer Free Computer Basic Class Every Month.

FINANCIAL AID
Financial Assistance available for those who qualify:
- Receiving EI (Unemployment)
- Received EI within last 3 years
- Received Maternity leave within 5 years
- Social Assistance recipient

Contact Info
(Midland & Finch)
330-4168 Finch Avenue East
Scarborough, ON M1S 5H6
416-292-2455
E-Mail: Info@jrscollege.com
Web: www.jrscollege.com
Fax: (416) 292-2455

647-378-3006
647-706-6123

தமிழ்ப்பூங்கா
Since 1997 Thamil Poonka

905-479-5375
647-706-6124

Saba Arulsubramaniam M.A.
Founder / Chair
Yoga Arulsubramaniam M.Sc. Dip. in Montessori
Program Manager / Principal

Tamil Class
Teachers' Training
Tamil Reading Club

Youth Leadership -Session
Career Planning
Counseling

Yoga Class
Yoga Therapy
Art & Craft
Kids Music Class

Home Work Class
Spoken English
Seniors Program
Settlement Services

www.thamilpoonka.org
3001 Markham Road # 21, Scarborough, ON (Markham & McNicoll)


# தொல்காப்பிய மன்றம் - கனடா

தொல்காப்பிய மன்றம்
கனடா

# தமிழ்த்திறன் போட்டி
## பிரிவு 8
## 2008இல் பிறந்தோர்

Web: www.tolkappiyam.ca
Email: tolcanada@gmail.com
Tolkappiyam-Canada